★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 56[illegible]

நம் நாடு

தி. மு. க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: வைகாசி 23உ செவ்வாய் (5—6—56) ★ ★ வெளியூர் : வைகாசி 24உ புதன் (6—6—56) [இதழ் 303

பாங்கிகளில் சேமிப்பு:
ஏழாண்டுகளில் இல்லாத அளவு உயர்வு

கடந்த ஏழாண்டுக் காலத்தில் வேறெப்போதும் இல்லாத அளவு 1955-ம் ஆண்டில்தான் இந்தியாவில் உள்ள ஷெட்யூல்ட் பாங்கிகள், ரூ 1000 கோடிக்கும் அதிகமான சேமிப்புகளைப் பெற்றிருந்தன என்று தெரிய வருகிறது.

அதற்கு முன்பு ரூ. 91 கோடியாக இருந்த 'டெபாசிட்'கள் ரூ. 1013 கோடியாக 1955-ல் உயர்ந்திருக்கின்றன என்று 'ரிசர்வ் பாங்கி' வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்று கூறுகிறது.

புலி வந்தாலும் பூனையாகிவிடும் வீரர் கோட்டம்!

கழகதோழர்தம் ஆற்றல்பற்றி அண்ணா

எட்டு ஆண்டுகளில் நாம் பெற்றுள்ள வளர்ச்சி— மாற்றாருக்கு வழி காட்டும் நமது மாநில மாநாடு!

ஆளும் கட்சியினர் நம்மைப்பற்றிய தப்புக் கணக்கைத் திருத்திக்கொள்வார்களா?

தேசிய ஏடுகளின் இருட்டடிக்கும் போக்கு கழகத்தை ஏதும் செய்துவிடாது

மாநில மாநாட்டில் அண்ணா சிறப்புரை

தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு விட்டன. பொதுத்தேர்தலில் தி. மு. கழகம் ஈடுபட வேண்டும் என்ற பெருவாரியான மக்களின் தீர்ப்பை ஒட்டி, தி. மு. கழகம் தேர்தலில் ஈடுபடும் என்ற தீர்மானமும் நிறைவேறியாகிவிட்டது. அந்தத் தீர்மானம் நிறைவேறும்போது, கூடியிருந்த இலட்சோபலட்சம் மக்களும் செய்த ஆரவாரப் பேரொலி அடங்கவே பல நிமிடங்கள் ஆயிற்று.

அப்போதெல்லாம் மாநாட்டின் வெற்றிக் களிப்பில் மிதந்து கொண்டிருந்த கழகத் தோழர்கள், அண்ணா சிறப்புரை ஆற்றுவார் என்ற அறிவிப்புக்காக, மாநாட்டுத் தலைவரையே உற்று நோக்கிக் கொண்டிருந்தார்கள்.

மக்களின் பேராவலைப் புரிந்து கொண்ட பொதுச்செயலாளர்—மாநாட்டுத் தலைவர், மாநில மாநாட்டின் சிகரம்போன்ற நிகழ்ச்சியான அண்ணா 'சிறப்புரை'க்கான அறிவிப்பைத் தந்தார்.

'இப்போது கழகத்தின் வழிகாட்டி—மக்கள் தலைவர் அண்ணா சிறப்புரை ஆற்றுவார்' என்ற அந்த அறிவிப்பிற்குத் தான் எத்தனை ஆற்றல்!

பந்தல் அதிர்ந்தது! பெரும் சலசலப்பு! நிற்காதீர்கள்! உட்காருங்கள்! 'அமைதி, அமைதி' என்ற சலசலப்பு!

அண்ணா ஒலிபெருக்கி அருகே வந்தார்—வந்தாரா?—மக்கள் எழுப்பிய பெரும் கையொலியும், ஆரவாரமும், அவரை ஒலி பெருக்கி முன்பு இழுத்து வந்தன!

முழங்கினார், அண்ணா! மாநாட்டின் வெற்றிக்கு வெற்றி தேடித்தந்தார்! கழகத்தின் பிறப்பையும், வளர்ப்பையும், வளர்ச்சியையும் படம் பிடித்துக்காட்டினார்!

கழகத்தில் ஈடுபட்டிருந்த தோழர்களின் ஆற்றலையும், நாட்டு மக்கள் தந்த பேராதரவையும் அளவிட்டுக் காட்டினார். மாநாட்டின் வெற்றியில் திளைத்திருந்ததாலும், கழகத்திடம் மக்கள் சுமத்துகிற புதிய புதிய பொறுப்புகளை ஏற்றுக்கொள்ள வேண்டியிருப்பதின் அவசியத்தாலும், அண்ணா அவர்கள், கழகத்தின் வளர்ச்சியைக் கண்டு பெருமைப்படுவதுடன் நின்றுவிடாமல், கழகத் தோழர்களுடைய கடமைகளையும், தனக்கே உரித்தான தனிச் சிறப்பானமுறையில் எடுத்துக்காட்டி, அரியதோர் கருத்துரை வழங்கி, மக்களின் உள்ளத்தை மகிழ்ச்சியால் குளிர்வித்தார்.

அண்ணா அவர்களது சிறப்புரையின் ஒரு பகுதி இங்கு தரப்படுகிறது; தொடர்ந்து அவரது சொற்பொழிவு வெளிவரும் :—

"மாநில மாநாட்டை நாம் வெற்றிகரமாக நடத்தியிருக்கிறோம். இப்படிப்பட்ட அரியதோர் வளர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஏற்படும் என்று யாரும் இதற்கு முன்னாலே எண்ணிப் பார்த்திருக்க முடியாத வகையில், நம்முடைய வளர்ச்சி நமக்கே ஓர் விதத்தில் ஆச்சரியத்தைத் தரத்தக்க நிலையில் அமைந்திருக்கிறது.

"இந்த மாநில மாநாட்டில் கூடியிருக்கிற நீங்கள், 4,000 அடி உயரத்திலே இருக்கிற வால்பாறையிலே இருந்தும், நெடுந்தொலைவிலே இருக்கிற அத்துக்குடி துறைமுகப் பட்டணத்திலே இருந்தும், தலைநகரம் என்று கருதப்படும் சென்னை நகரத்திலே இருந்தும், இவை எல்லாவற்றிலும் சிறப்பாகக் குறிப்பிடப்பட வேண்டிய சிற்றூர்களிலேயிருந்தும் இலட்சக் கணக்கில் இங்கே திரண்டிருக்கிறீர்கள். நான், நாட்டைப் பார்த்தும், நாட்டை ஆளுகிற ஆட்சியாளர்களைப் பார்த்தும் கொஞ்சம் ஆணவத்தோடுகூடச் சொன்னேன் —'சென்னையில் நாங்கள் கூட்டிய மாநில மாநாட்டில் ஒரு இலட்சம் மக்கள் கூடினார்கள்; நாங்கள் இப்போது அடைந்திருக்கிற வளர்ச்சியை நீங்கள் காண வேண்டுமானால், திருச்சியில் நடைபெற விருக்கிற மாநில மாநாட்டில் மூன்று இலட்சம் மக்களை நாங்கள் கூட்டிக்காட்டுகிறோம்'—என்று நான் கூறினேன். சொல்லிவிட்ட பிறகு, எனக்கேகூட கொஞ்சம் சந்தேகம் வந்தது—'சற்று அதிகமாகக் கூறிவிட்டோமோ?'—என்று! இன்று நாம் பார்க்கிற இடங்களில் எல்லாம் தி மு. க. தோழர்களைத்தான் பார்க்கிறோம்.

"இந்த மாநில மாநாட்டுப் பெருந் திடலிலே மட்டுமல்ல; திடலில் இருந்து திருச்சி கோடிவரை ஆறு, ஏழு மைல் தொலைவில் உள்ள இடங்களில் எல்லாம்—நெடுஞ்சாலைகளில் எல்லாம் நம்முடைய தோழர்கள் நிரம்பியிருப்பதை நாம் காண்கிறோம்.

"உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், ஏதாவது ஒரு பொருளை இங்கிருந்து ஸ்ரீரங்கத்திற்கு அனுப்பவேண்டுமானால், அந்தச் சாமானை பக்கத்திலே இருக்கிற தோழரிடத்திலும், அவர், அவர் பக்கத்திலிருக்கிற தோழரிடத்திலும் கொடுத்தால், சாமான், தானாக ஸ்ரீரங்கம் போய்ச் சேர்ந்துவிடும்; அந்த அளவுக்கு திருச்சி ரோடுகளிலும் நம் தோழர்கள் நிறைந்திருக்கிறார்கள்.

"மிகப் பெரும் கூட்டத்தை நாம்—இந்த மாநில மாநாட்டில் காணுகின்றோம் என்ற களிபேருவகையால் மட்டும் நான் இங்கே பேசிக்கொண்டிருக்கவில்லை; வந்திருக்கிற தோழர்கள் அத்தனை பேரும் நல்லதோர் குறிக்கோளுடன் இங்கே வந்திருக்கிறார்கள்; 'கழகம் என்ன கட்டளை பிறப்பிக்கக் காத்திருக்கிறது' என்பதை அறிந்து செல்வதற்காக வந்திருக்கிறார்கள்; ஆற்றல் மிக்கவர்கள் வந்திருக்கிறார்கள்; அஞ்சா நெஞ்சர்கள், வந்திருக்கிறார்கள்; சிறைச்சாலைக்கும்—குடும்பத்திற்கும் வித்தியாசம் தெரியாதவர்கள் வந்திருக்கிறார்கள். இவைகளை எல்லாம் பார்த்து நாம் பெருமையடைகின்றோம் என்ற போதிலும், நாட்டை ஆளும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கும் கட்சிக்காரர்கள், நம்முடைய கழகத்தைப் பற்றி வைத்திருக்கிற தப்புக் [illegible] தவறான கணக்கு [illegible] உணர்த்த சொல்வதற்கு இந்த மாநில மாநாடாவது வழிகாட்டியாக இருக்கவேண்டும் [illegible] நான் [illegible] கின்றேன்.

"இங்கே வந்திருக்கிற தோழர்களை, இங்கே வரவழைப்பதற்கான சூழ்நிலையை உருவாக்குவதற்காக உண்மையிலேயே நாங்கள் கொஞ்சம் கஷ்டமடைந்திருக்கின்றோம். வெட்ட வெளியாக் கிடந்த இந்த இடத்தில் பாம்பும், நச்சுப் பூச்சிகளும் [illegible] டைந்து கொண்டிருந்தன.

"உங்களில் நன்றாக அனைவருக்கும் தெரியும்—தி.மு.க.-விலேயே கடைசி பலவீனன் நான்; அது மட்டுமல்ல; நான் அதிகமாக பயந்த சுபாவமுடையவன்; என்

(4-ம் பக்கம் பார்க்க)

'வெள்ள நிவாரணம் போதுமானதாக இல்லை' என்பதற்காக ஆர்ப்பாட்டம்

ஒரிசாவில் எம். எல். ஏ. உட்பட 7 பேர் கைது

கட்டாக், ஜுன் 4—

'வெள்ள நிவாரணம் போதுமான அளவு தரப்படவில்லை' என்று, எம் எல். ஏ ஒருவர் ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கிறார்.

இந்த ஆர்ப்பாட்டத்திற்காக, நிஷாமணி குந்தியா என்ற ம. சோ. கட்சி எம். எல். ஏ.-யும், மற்றும் ஆறு பேர்களும் கைது செய்யப் பட்டிருக்கின்றனராம்.

கடந்த வாரத்தில் சுமார் 500 பேர், வெள்ள நிவாரணம் போதவில்லை என்பதால் உண்ணாவிரதம் இருக்கப் போவதாகக்கூறி நீர்தால் போலீஸ் ஸ்டேஷன் முன் கூடிவிட்டனர்; உண்ணாவிரதமும் தொடங்கினர்; பின்னர், குந்தியா, அவர்களடங்கிய கூட்டம் ஒன்றில் பேசினார்; பின்னர் அவர்கள் கலைந்து சென்றனராம்.

ஆனால், போலீசார், குந்தியாவும், இதரும் சட்டவிரோதமாக அனுமதியின்றி கூட்டம் நடத்தினதாகக் குற்றம் சாட்டி அவர்களைக் கைது செய்திருக்கின்றனர்.

மாநில மாநாட்டுத் தீர்மானங்கள்

இலட்சம் மக்களுக்கு பொதுச்செயலாளர் விளக்கம்

திருவல்லிக்கேணி கடற்கரையில் மாபெரும் பொதுக்கூட்டம்

சென்னை, ஜுன் 5—

திருச்சியில் கடந்த திங்கள் நடைபெற்று வெற்றிகரமாக முடிவுற்ற தி. மு. கழக 2-வது மாநில மாநாட்டின் தீர்மானங்களைக் குறித்து விளக்கம் தருவதற்காக, சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில் ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் 3—6—56 மாலை நடைபெற்றது.

தலைமைக் கழகம் ஏற்பாடு செய்திருந்த அந்தக் கூட்டத்தில், ஏறத்தாழ ஒரு இலட்சம் மக்கள்—ஏராளமான தாய்மார்கள் உட்படத் திரண்டிருந்தனர்.

தோழர் கே. எம். கண்ணபிரான் முன்மொழிய, தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன் வழிமொழிய, தி. மு. கழகத் துணைப்பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள், கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

தலைவர் தம் முன்னுரையில் கூட்டத்தின் நோக்கத்தையும், மாநில மாநாட்டின் சிறப்பு இயல்புகளையும் விளக்கிக் கூறினார்.

அடுத்து பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், மாநில மாநாட்டில் ஒருமனதாக நிறைவேறிய தீர்மானங்களைக் குறித்து, அரிய விளக்கங்கள் தந்து சிரியதோர் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

மாநில மாநாட்டின் சிறப்புகளையும், அந்தச் சிறப்பான மாநாட்டை நடத்துவதற்காகக் கழகம் அனுபவித்த இன்னல்களையும் எடுத்துரைத்து, கழகம் கடந்த நான்கு ஆண்டுகளுக்குள் எவ்வளவு வளர்ந்திருக்கிறது என்பதற்கு எடுத்துக் காட்டாக மாநில மாநாடு அமைந்திருந்ததையும் [illegible] கூறினார், பொதுச்செயலாளர் [illegible].

தலைவர் முடிவுரைக்குப் பின் நன்றி கூறுதலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

கூட்டத்திற்கான ஏற்பாடுகளை தலைமை நிலையச் சார்பில் தோழர் கே. எம். கண்ணபிரான் அவர்கள் சிறப்பாகச் செய்திருந்தார்.

ஒலி, ஒளி ஏற்பாடுகள், கழகத் தோழர் கபாலி அவர்களால் சிறப்புறச் செய்யப்பட்டிருந்தன.

42-வது வட்ட தி. மு. கழகத்தினைத் தோழர்களும் கூட்டத்தின் வெற்றிக்கு உடனிருந்து [illegible] பாடுபட்டனர்.

அவர்களுக்கெல்லாம் [illegible] நிலையச் சார்பில் தோழர் [illegible] ஆர். எஸ். [illegible] [illegible]

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 5—6—'56 செவ்வாய்

ஆணவத்தின் விளைவு?

எதிரிகள் உட்பட எல்லோரும் ஒப்புக்கொண்டுள்ள ஒரு உண்மை—'பம்பாய் நகரம், பூகோள வரலாற்று ரீதியாகவும், மொழிவழியிலும் மராட்டிய மக்களுடையதுதான்' என்பது.

'சம்யுக்த மராட்டிய மாநிலத்தின் பெருமைக்குரிய தலைநகராக பம்பாய் விளங்கவேண்டும்' என்ற மராட்டியரின் கோரிக்கை நியாயமானது என்பதை, இந்த உண்மை வலியுறுத்துகிறது.

பம்பாய் நகரில் வாழும் மக்களில் தனியொரு மொழி பேசுபவர்கள் என்ற முறையில், 44 சத விகிதத்தினர் மராட்டியர்கள்தான். அவர்கள் அனைவரும், 'பம்பாய் மராட்டிய மண்டலத்தின் பிரிக்கமுடியாத தலைநகராக விளங்கவேண்டும்' என்றே விருப்பம் தெரிவித்து, அவ்வாறே கோரியும் வருகின்றனர்.

ஆனாலும், 'பம்பாய் நகரம், டில்லி ஆட்சியின் கீழ்தான் ஐந்து ஆண்டுகளுக்கேனும் இருக்கத்தான் செய்யும்' என்று பம்பாயில்கூடிய காங்கிரஸ் பொதுக் குழுக் கூட்டத்தில் இந்தியப் பிரதமர் நேரு அறிவித்திருக்கிறார்.

இந்த அறிவிப்பு வெளியிடப்படு முன்னர், 'பம்பாய் பற்றிய முடிவு இறுதியானதல்ல; கூடிப்பேசலாம்; விவாதிக்கலாம்' என்றெல்லாம் கூறி, சாகசம் புரிந்துவந்தார், நேரு பண்டிதர்!

இன்று, ஒரு பெரும் நியாயத்திற்கு விரோதமாக, 'அநீதியை நிலைநாட்டியே தீருவேன்' என்று கர்ஜனை புரியும் அவரது போக்கு, பொதுவாக உலக அரசியல்வாதிகளுடையவும், குறிப்பாக, இந்திய அரசியல்வாதிகளுடையவும், அதிலும் குறிப்பாக, தமிழ் நாட்டில் உள்ள வடநாட்டு 'எடுபிடி'களுடையவும் கூரிய கவனத்திற்கும், தீவிர பரிசிலனைக்கும் உரியதாகும்.

பம்பாய் நகர் ஐந்து ஆண்டுகளுக்கு டில்லி ஆட்சியின் கீழ் என்ன அவசியத்திற்காக இருக்கவேண்டும் என்பதை நேருவோ, அவரை 'தேற்றரவாள'ராக ஏற்றுக்கொண்டிருப்போரோ, இதுவரையில் விளக்கிக் கூறவில்லை.

பம்பாய் நகரில் உள்ள சிறுபான்மை மொழியினருக்கு, பம்பாய் மராட்டியத்துடன் இணைவதினால் என்ன ஆபத்துக்கள் நேர்ந்துவிடும்? டில்லி ஆட்சியின்கீழ் பம்பாய் அமைவதினால் அவர்களுக்குக் கிடைத்துவிடக்கூடிய பாதுகாப்புத்தான் என்ன?—என்பதை, பம்பாய்க்கு வெளியில் உள்ள மக்கள்—நியாய உள்ளம் கொண்டோர் அறிந்துகொள்ள விரும்புகிறார்கள்; தெரிவிப்பார்களா?

'சிறுபான்மை மொழியினருக்கு ஆபத்து' என்ற கற்பிதமான காரணத்தைப் புகலிடமாகக் கொண்டு, தெளிவான ஒரு நியாயத்தை அடிக்கத் துடிக்க உயிரோடு புதைகுழியில் தள்ளுவது மனித இதயம் கொண்டோரால் பொறுத்துக் கொள்ளத்தக்கது அல்லவே!

பண்டித நேருவின் எதேச்சாதிகாரமான முடிவு, பம்பாயை மீண்டும் ஓர்முறை, சனவரித் திங்களுக்கு இழுத்துச் சென்று விடுமோ என்ற ஐயம் ஏற்படும் வகையில்—நிலைமைகள் வளர்ந்து வருகின்றன.

தங்களுடைய கோரிக்கையை வலியுறுத்துவதற்காக, சட்டபூர்வமான எல்லா வழிகளையும் மராட்டிய மக்கள் மேற்கொண்டு விட்டனர்.

ஜனநாயக ரீதியான, சட்ட மறுப்பு, கருப்புக்கொடி காட்டுதல் முதலிய வழிகளை மேற்கொண்டு, ஏற்கனவே மராட்டியரில் பல்லாயிரவர் சிறைபட்டிருக்கின்றனர்.

இத்தனைக்குப் பிறகும், நியாயம் வழங்க மறுத்து, அநீதியை நிலைநாட்ட பண்டித நேரு முடிவு செய்திருப்பதை வன்மையாகக் கண்டிக்கிறோம். அவரது எதேச்சாதிகாரத்திற்குத் துணை நிற்கும் அகில இந்தியக் காங்கிரசின் பொதுக் குழுவும் மக்களின் கடுமையான கண்டனத்திற்கு உரியதாகும்.

டில்லி ஆட்சியாளர்களுடைய—குறிப்பாக, பண்டித நேருவுடைய எதேச்சாதிகார உள்ளத்தைத் தெளிவாகப் புரிந்துகொள்ள பம்பாய் பற்றிய முடிவே போதுமான சான்றாகும்.

இந்த நிலை வளருவது, இந்தியாவின் எதிர்கால அரசியலில் ஜனநாயகம் தழைப்பதற்குப் பேராபத்தாகும்.

நேரு பண்டிதரின் குறுகிய சுயநல நோக்கையும், சர்வாதிகாரப் போக்கையும் தெளிவான நியாயங்களையும்கூட துச்சமென மதிக்கும் ஆணவத்தையும், தென்னாட்டில் அவரது கைப்பாவைகளாக—'எடுபிடி'களாக—ஏவலாட்களாக உள்ள அரசியல்வாதிகள், இப்போதேனும் — காலங்கடந்தேனும் உணர்ந்தாக வேண்டும் என்று விரும்புகிறோம்.

மராட்டியர், பண்டித நேருவின் எதேச்சாதிகார முடிவை எதிர்த்துப் போராடி வெற்றி பெறுவர் என்பதில் எவருக்கும சந்தேகம் இருக்க முடியாது. அவர்களது நியாயமான உரிமைப் போராட்டம் வெல்க! வெல்க! — என வாழ்த்துகிறோம்.

உங்களுக்குத் தெரியுமா?

1955-ம் ஆண்டில் மொத்தம் 43,645 அயல் நாட்டு உல்லாசப் பிரயாணிகள் இந்தியாவுக்கு வருகை தந்தனர் என்றும், அயல் நாட்டு உல்லாசப் பிரயாணிகள் மூலம் கிடைத்த அன்னிய நாணயச் செலாவணி வருமானம் 1953-ல் ரூ 2,70,000 என்றும், 1954-ல் ரூ 3,60,00,000 என்றும், மத்திய போக்குவரத்து மந்திரி, ராஜ்யசபையில் தெரிவித்தார். 1955 ஜனவரி-ஜூனில் கிடைத்த அன்னியச் செலாவணி வருமானம் சுமார் ரூ. 1,80,00,000 ஆகும்.

மாஸ்கோ சர்க்காரின் அதிகாரங்கள்

ரஷ்யக் குடியரசுகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகின்றன

நீதி, போக்கு-வரத்து முதலிய இலாகாக்கள் கைமாறுகின்றன

புதிய மாற்றங்கள் குறித்து சில தகவல்கள்

மாஸ்கோ, ஜூன் 3—

சோவியத் (மத்திய) அரசாங்கத்திடம் குவிந்துகிடக்கும் அதிகாரங்களைப் பல்வேறு குடியரசுகளுக்குமிடையே பரவலான முறையில் பகிர்ந்தளிக்கும் வேலைகள், சிலகாலமாகவே ரஷ்யாவில் நடைபெற்று வருகிறது. இதற்கு ஓர் எடுத்துக்காட்டு, ஏப்ரல் மாதத்திலேயே நிலக்கரிச் சுரங்க இலாகா கலைக்கப்பட்டு, அதன் பொறுப்புகள் பல்வேறு குடியரசுகளிடையேயும் பகிர்ந்தளிக்கப்பட்ட நிகழ்ச்சியாகும்.

இப்போது, பொருளாதாரத் துறையிலும் சோவியத் அரசாங்கத்தின் அதிகாரங்கள் ரஷ்யக் குடியரசுகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கிறதாம்!

'இதன் விளைவாக சோவியத் அரசாங்க அமைச்சர் துறைகள் பல ஒழிக்கப்பட்டுவிட்டன; இந்த அமைச்சர் துறைகளின் நிர்வாகப் பொறுப்புகள் சோவியத் குடியரசுகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும்; இதன்படி, ரஷ்ய அரசாங்கத்தின் பொருளாதார நடவடிக்கைகள் பரவலான முறையில் பகிர்ந்தளிக்கப்படுகிறது' எனக் கூறப்பட்டுள்ளது.

சோவியத் அரசாங்க நீதி இலாகாவும் கலைக்கப்பட்டுவிட்டதாம்; இந்த இலாகாவின் நிர்வாகப் பொறுப்புகள் குடியரசுகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டனவாம்.

இம்முடிவால், உணவு அமைச்சர் துறை, பால் பண்ணை இலாகா மீன் பிடிக்கும் தொழில், கொள்முதல், தொழில் இலாகாக்கள், சிறு தொழிற்சாலைகள், காகித உற்பத்தித் தொழிற்சாலைகள், மரவேலை தொழிற்சாலைகள்—ஆகியவற்றின் நிர்வாக இலாகாக்கள் பாதிக்கப்படுகின்றனவாம்.

"குடியரசுகள், அவைகளுடைய பொருளாதார நடவடிக்கைகளை, அவைகளை கவனித்துக் கொள்ளுவதற்குரிய நிலைகளைப் பெற்றுவிட்டன. ஒவ்வொரு குடியரசும் தனது தொழில் வளப் பெருக்கத்திற்கும், நிர்வாகத்திற்கும் வேண்டிய நிபுணர்களைப் பெற்றிருக்கிறது. எனவே, தொழில் துறை நிர்வாகம் நன்கு நிர்வகிக்கப்படவும், தொழில் முன்னேற்றம் இப்போதையினும் அதிக அளவில் ஏற்படவும் இதுபோன்ற நடவடிக்கை அவசியமென்று சோவியத் பாராளுமன்றம் முடிவு செய்தது; அதை யொட்டி, இது சம்பந்தமான உத்தரவுகளை ரஷ்யப் பாராளுமன்றம் பிறப்பித்திருக்கிறது," என்றெல்லாம் கூறப்பட்டுள்ளது.

9,000 மைல்கள்!

நடந்தே ஒருவர் இந்தியாவைச் சுற்றிப்பார்க்கிறார்

புதுடில்லி, ஜூன் 1—

கடந்த 1953-ம் ஆண்டு துவக்கத்தில், சொந்த ஊரான உதகமண்டலத்திலிருந்து, கால் நடையாகவே இந்தியாவைச் சுற்றிப் பார்ப்பது என்று புறப்பட்ட தோழர் டி. இராமன் என்பார், இப்போது புதுடில்லி வந்து சேர்ந்திருக்கிறார்.

முக்கியமான நகரங்கள், அபிவிருத்தித் திட்டப் பிரதேசங்கள் இவற்றை எல்லாம் பார்க்க சுமார் 9,000 மைல் இதுவரை அவர் நடந்திருப்பதாகக் கூறியிருக்கிறார், அந்தத் தோழர்!

இந்தத் தோழரை விந்தியப் பிரதேசக் காடு ஒன்றினுள் கொள்ளைக் கூட்டத்தவர் பிடித்துக் கொண்டதாகவும், அவரைக் கொள்ளையர்கள் உதைத்துத் துன்புறுத்தவில்லை என்றும், அவரிடமிருந்த விலையுயர்ந்த புகைப்படம் எடுக்கும் கருவி ஒன்றை மட்டும் பிடுங்கிக் கொண்டனர் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

இன்னும் இரண்டொரு நாட்களில் காஷ்மீருக்குப் புறப்படுவார் எனவும், ஆறு வாரங்களுக்குள் காஷ்மீர் சென்றுவிட்டு, அங்கிருந்து இரயில் மூலம் வீடு திரும்புவார் என்றும் தெரிய வருகிறது

பர்மியப் பிரதமர் விலகிவிடுவார்?

இரங்கூன், ஜூன் 3—

பர்மியப் பிரதமர் ஊ-நு தனது பதவியை ராஜினாமாச் செய்துவிட்டு பாசிஸ்டு எதிர்ப்பு மக்கள சுதந்தர லீகைச் சீர்திருத்தும் வேலையில் ஈடுபட முடிவு செய்துவிட்டதாக பர்மிய பத்திரிகைகள் அறிவித்திருக்கின்றனவாம்.

அவர், தனது கட்சியிலிருக்கும் ஊழல்களை ஒழித்து, விரும்பத்தகாதவரை கட்சியிலிருந்து நீக்கிவிடத் தீர்மானித்துள்ளாரென்றும், தற்காப்பு அமைச்சர் ஊ-பா-சே பிரதம அமைச்சராகலாமென்றும் அறிவிக்கப்படுகிறது.

உங்கள் குறிப்புக்கு!

நாட்டில் பால் விநியோகத்தை அதிகப்படுத்துவதற்காக பம்பாய், கல்கத்தா, சென்னை, டில்லி ஆகிய இடங்களில் பெரிய பால் பண்ணைகளையும், வழு பால் தூள் தயாரிப்புத் தொழிற்சாலைகளையும், நகர மக்களுக்கு பால் விநியோகம் செய்வதற்கான 26 கூட்டுறவு பால் 'சப்ளை யூனியன்'களையும், பாலேடு தயாரிப்பதற்காக 12 கிராம கூட்டுறவு நிறுவனங்களையும் இந்திய சர்க்கார் அமைத்து வருகின்றனராம்.

ரூ. 75 கோடி செலவில்

கிராமங்களுக்கு மின்சார வசதி

முதலாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் மொத்தம் 7,761 கிராமங்களுக்கும், நகரங்களுக்கும் மின்சார வசதியளிக்கப்பட்டதென்றும், முதலாவது திட்டத்தில் கிராமாந்திர மின்சார வசதிக்கென்று தனியாகத் தொகைகள் எதுவும் ராஜ்ய சர்க்கார்களால் ஒதுக்கப்படவில்லையாகையால் அதற்கு ஆகியிருக்கும் செலவுபற்றிய தகவல் கிடைக்கவில்லை என்றும், மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் மொத்தம் 11,100 கிராமங்களுக்கும், நகரங்களுக்கும் மின்சார வசதியளிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது என்றும், அதற்காக 75 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என அறிவிக்கப்பட்டுள்ளது.

தம்மம்பட்டி தோழர்கள் வழக்கு

மீண்டும் ஒத்திவைப்பு

அர்த்தால் சம்பந்தமான தம்மம்பட்டித் துப்பாக்கிப் பிரயோக வழக்கு 1-ந் தேதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சப்-இன்ஸ்பெக்டர் (போபுரந்தாங்கி) கோபாலகிருஷ்ண ஐயர் வழக்கு மன்றத்திற்கு வராத காரணத்தால், வழக்கு 9-ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

நம் கழகத் தோழர்கள் சார்பாக வழக்கறிஞர் நெட்டோவும், வழக்கைக் கவனிப்பதற்காக மாவட்டச் செயலாளர் ஜி. பி. சோமசுந்தரம், கே. எஸ். மணி மற்றுமுள்ள கழகத் தோழர்களும் நீதிமன்றத்திற்கு வந்திருந்தனர்.

✶

துப்பாக்கிக் குண்டடிபட்ட

தோழர் இராமலிங்கம்

தம்மம்பட்டித் துப்பாக்கிப் பிரயோகத்தில் படுகாயம் அடைந்து சேலம் தலைமை மருத்துவ விடுதிக்கு எடுத்துச் செல்லப்பட்ட தோழர் இராமலிங்கம் மருத்துவ மனையினின்று 28—5—56-ல் விடுவிடுக்கப்பட்டு, ஆத்தூர் சப்-ஜெயிலுக்கு அனுப்பப்பட்டார்.

இச்செய்தி அறிந்த அவரது உறவினர்களும், திரு. எம். பி. சுப்பிரமணியம் எம்.எல்.ஏ. அவர்களும் ஜாமீன் அளித்து, ஆத்தூர் அரசாங்க மருத்துவ விடுதியில் 29—5—56 அன்று சேர்க்கப்பட்டார். தோழருக்கு உடல் முழுதும் 'பேண்டேஜ்' செய்யப்பட்டிருக்கிறது; டாக்டர் கணேசன் அவர்கள் சிகிச்சை அளித்துவருகிறார்.

1—6—56-ல், மாவட்டச் செயலாளர் ஜி. பி. சோமசுந்தரம், தோழர்கள் கே. எஸ். மணி, ஜி. என். பெரியசாமி (துப்பாக்கிப் பிரயோகத்தில் குண்டடிபட்டு குணமடைந்தவர்கள்) ஆகியோர் அத்தோழரைக் கண்டு ஆறுதல் கூறினர்.

உள்ளூர்க் கழகத் தோழர்களும் வெளியூர்த் தோழர்களும் அடிக்கடி சென்று தோழர் இராமலிங்கத்தைப் பார்த்துவருகின்றனர்.

தொழில் துறைத் தகராறுகள்

'சோஷலிசம் மாதிரி' ஆட்சியில் காணப்படும் நிலவரம்

புதுடில்லி, மே 31—

1956 மார்ச் மாதத்தில், புதிதாக மொத்தம் 93 தகராறுகள் ஏற்பட்டனவென்றும், அவற்றில் மொத்தம் 97,908 தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டிருந்தனரென்றும் கூறப்பட்டுள்ளது. முந்திய மாதத்தில் புதிதாக ஏற்பட்ட 87 தகராறுகளில் மொத்தம் 42,079 தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டிருந்தனராம்!

இம்மாதம் மொத்தம் 133 தகராறுகள் நீடித்துவந்தன; இவற்றில், 131 தகராறுகளில், மொத்தம் 1,30,517 தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டிருந்தனர். முந்திய மாதத்தில் நீடித்துவந்த 124 தகராறுகளில், மொத்தம் 69,785 தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டிருந்தனர்.

இம்மாதம் நீடித்துவந்த தகராறுகளில் 14 தகராறுகள் கதவடைப்புகள் காரணமாக ஏற்பட்டவையாகும். இவற்றில் மொத்தம் 15,983 தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டிருந்தனர்.

பரிசீலனை மாதத்தில் மொத்தம் 103 தகராறுகள் முடிவடைந்தன; 27 தகராறுகளில், தொழிலாளர்களுக்கு முழு அளவோ அல்லது ஓரளவோ வெற்றி பெற்றனர்; 42 தகராறுகளில் அவர்களுக்கு வெற்றிகிட்டவில்லை; 21 தகராறுகள் முடிவுகள் நிச்சயமில்லாமலும், 8 தகராறுகளில் முடிவு தெரியாமலும் இருந்தன.

மதம் மாறிய தாழ்த்தப்பட்டோருக்கும் இலவசக் கல்விச் சலுகை

ஆந்திர சர்க்கார் அளிக்கிறது

கர்னூல், ஜூன் 4—

ஆந்திராவில், இனி, தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கிடைக்கும் கல்விச் சலுகைகள், தாழ்த்தப்பட்டோராயிருந்து மதம் மாறிய எல்லோருக்கும் கிடைக்கும் எனத் தெரியவருகிறது.

கிறித்துவர்களாக மதம் மாறிய தாழ்த்தப்பட்டோருக்கும், இதர மதங்களுக்கு மாறியவர்களுக்கும் பத்தாவது வகுப்பு வரை, இனி ஆந்திராவில் இலவசமான கல்வி அளிக்கப்படும்.

பள்ளிக்கூடக் கட்டணம் எதும் தாழ்த்தப்பட்டோருக்குக் கிடையாது என்ற சலுகை, மதம் மாறிய தாழ்த்தப்பட்டோருக்கும் உண்டு.

தாழ்த்தப்பட்ட, ஆனால் மதம் மாறிய வகுப்பு மாணவர்களுக்கு ஏற்கனவே இலவசமான கல்லூரிக் கல்வி தரப்படுகிறது. சிறுவர்களுக்கு பத்தாவது வகுப்பு வரை அரைச் சம்பள சலுகையும், பெண்களுக்கு முழுச் சம்பள சலுகை ஒன்று முதல் எட்டு வகுப்பு வரையும், நாலாம் படிவம் முதல் ஆறும் படிவம் முடிய அரைச் சம்பள சலுகையும் ஏற்கனவே தரப்பட்டு வந்தது.

இரண்டாவது திட்ட இலக்குகள் நிறைவேற!

ரூ 1,250 கோடிக்கு 'உபரி வரி' விதிக்கப்படுமா?

நில வரியை இரட்டிப்பாக்குமாறு பிரிட்டிஷ் நிபுணர் சிபாரிசு?

புதுடில்லி, மே 31—

புதிய விதமாக சொந்த வருமானத்தின்மீது வரி விதிப்பதின் மூலம் ரூ 100 கோடியும், வர்த்தக இலாபத்தின்மீது வரி விதிப்பதின் மூலம் சுமார் ரூ. 30 கோடியும் ஆக, ஆண்டிற்கு ரூ 130 கோடி அதிக வருமானம் கிடைப்பதற்கு பிரிட்டிஷ் நிபுணர்—பேராசிரியர் நிக்கோலஸ் கால்டார் சில யோசனைகள் தெரிவித்துள்ளார். அவருடைய 'அறிக்கை', பார்லிமெண்டின் இரு சபைகளிலும் வைக்கப் பட்டிருக்கிறது.

அவர் கூறியுள்ள வரிகள் மூலம் முழுப் பலன் கிடைப்பதற்கு சில ஆண்டுகளாகுமென்றும், ஆனால், செலவு விரயமாவதை இந்த வரிகள் உடனடியாகத் தடுக்குமென்றும் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாம்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டச் செலவிற்குப் பணம் திரட்ட ரூ. 450 கோடிக்குப் பதில் ரூ. 1,250 கோடிக்கு 'உபரி வரி' விதிக்கப்பட வேண்டுமென்றும், பாமர மக்கள் மீது அனாவசியமாகச் சுமை ஏற்றாமல் சமூகத்திலுள்ள பணக்காரர்களிடமிருந்தே இந்த 'உபரி வரி' வசூலிக்கப்பட வேண்டுமென்றும் அவர் கூறியுள்ளாராம்; எனவே, இரண்டாவது திட்ட இலக்குகள் நிறைவேற வேண்டுமானால், ஆண்டிற்கு ரூ. 250 கோடி—அல்லது, ஐந்தாண்டுக் காலத்திற்கு ரூ. 1,250 கோடிக்கு 'உபரி வரி' விதிக்கப்படவேண்டும்.

அவருடைய சிபாரிசுகளை அமுல் நடத்திய பிறகும்கூட, மேற்கொண்டு ஆண்டிற்கு ரூ 100 கோடி தேவையாக இருக்கும்; இப்பற்றாக்குறையைச் சமாளிக்க நிலவரியை இரட்டிப்பாக்குமாறு (தற்போது, நிலவரியின் மூலம் ஆண்டிற்கு ரூ. 50 - கோடி கிடைக்கிறது) அவர் சிபாரிசு செய்துள்ளாராம்.

இரண்டாம் திட்டத்திற்கு அடிப்படை என்ன?

சித்தார்த்த நகர், ஜூன் 3—

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் ஒரு ஜாதகம்; இந்தியத் தாயின் ஜாதகம்; இந்த ஜாதகம் கிரகங்களின் அடிப்படையில் கணிக்கப்பட்டதல்ல; நாட்டின் சூழ்நிலைகள், சந்தர்ப்பங்கள், மக்களின் நாடி, அவர்களின் நம்பிக்கை, ஆசைகள், பலம், பலவீனம் ஆகியவற்றைக் கொண்டு கணிக்கப்பட்டது!" என்று பிரதமர் நேரு அனைத்திந்திய காங்கிரசுக் கூட்டத்தில் கூறியுள்ளார்.

சென்னை அரசாங்கம் தீர்மானித்துவிட்டதாம்!

மதுரை, ஜூன் 3—

தற்போது எழெட்டுப் பண்டங்கள் மீது விதிக்கப்பட்டுவரும் பல கட்ட விற்பனை வரிக்குப் பதிலாக ஒரு கட்ட விற்பனை விதிக்க சென்னை அரசினர் தீர்மானித்துவிட்டதாகவும், சில வாரங்களில் சர்க்காரின் முடிவு அமுலுக்கு வருமென்றும் 'ரெவினியூ' அமைச்சர் மாணிக்கவேலர் தெரிவித்துள்ளார்.

கல்வித் தரம் குறையாமல் பார்த்துக்கொள்க!

மாநில அரசாங்கங்களுக்கு மத்திய சர்க்கார் தாக்கீது

புதுடில்லி, ஜூன் 1—

"இரண்டாம் திட்டத்தின்கீழ் அமுல் செய்து விரிவாக்கப்படும், கல்வித் திட்டங்களினால், கல்வியின் தரம் எவ்வகையாலும் குறையாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது மிக அவசியமான ஒன்றாகும்,"

என்று, மாநில சர்க்கார்களுக்கு மத்திய சர்க்கார் தாக்கீது அனுப்பியிருக்கிறதாம்.

மேலும், ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களின் பயிற்றுவிக்கும் அறிவுத்திறன் போதுமானதாக இல்லை எனவே, இந்த ஆசிரியர்களுக்கு அவ்வப்போது, புதிய பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும் என்பதுடன், இவர்கள் எல்லாம் தங்கள் திறமைகளை அதிகரித்துக்கொள்ளும் வகையில், விவாத அரங்குகளில் அடிக்கடி சந்திக்குமாறும் கோரப்பட வேண்டும் என்றும், மத்திய சர்க்கார் ஒரு சுற்றறிக்கை மூலம் மாநில சர்க்கார்களுக்குத் தெரிவித்திருக்கின்றனராம்.

மீனக்கரை நீர்த்தேக்கத் திட்டத்திற்கு அனுமதி

பாலக்காடு, மே 31—

பாலக்காடு தாலுகா, மீனக்கரை நீர்த்தேக்கத் திட்டத்திற்கு சர்க்கார் அனுமதி அளித்துள்ளனர். இத்திட்டத்தை அமுல் நடத்தக் கோரி சில ஆண்டுகளாகக் கிளர்ச்சி நடைபெற்று வந்தது நினைவிலிருக்கலாம்.

மனிதனின் அறிவாற்றல் குறைந்துவிடுமாம்!

அடுத்த நூறு ஆண்டு நிலை பற்றி பேராசிரியர்கள் ஆராய்ச்சி

நியூயார்க், மே 31—

"மனிதன் புதிய நாகரிகத்துக்குச் செல்லும் வழியில் நின்று கொண்டிருக்கிறான்; அடுத்த 100 ஆண்டுகளில் மக்கள் தொகை குறைந்தது இரண்டு அல்லது நான்கு மடங்கு பெருகும்; தொழில் நுட்பம், இந்த மக்களுக்கு உணவு, உடை, உறையுள் ஆகியவற்றைப்போதுமான அளவு வழங்க முடியும்; தாதுப் பொருள்களும், உணவும் உலோகங்களும் குறைவில்லாமல் கிடைக்கும்,"

என்று, உலகத்திலுள்ள வளங்களைப் பற்றி கலிபோர்னியாத் தொழில் நுட்பக் கல்லூரிப் பேராசிரியர்கள், பெரிய ஆராய்ச்சி ஒன்று நடத்தியபின் முடிவு செய்துள்ளார்களாம்.

'எனினும், ஒன்றே ஒன்று மட்டும் குறைவுபடலாம்' என்று விஞ்ஞானிகள் உரைக்கிறார்கள்; அது மனிதனின் அறிவாற்றல். உலக மக்கள் தொகையின் மிகப் பெரிய பெருக்கத்தைக் கவனித்துக் கொள்ளும் நாகரீகத்துக்குத் திட்டக்கோலி, அதனை அமைத்துச் செயற்படுத்த படித்த ஆண்களும், பெண்களும் வேண்டும்.

மக்கட்தொகை பெருகப் பெருக இயந்திர நாகரீகம், ஆகாயம்—கடல்நீர்—சாதாரணப் பாறை—சூரிய வெளிச்சம் ஆகிய மூலப் பொருட்களைப் பயன்படுத்த வேண்டிய நிலைமையும் ஏற்படுமாம்.

தாழ்ந்த ரக உலோகத் தாதுக்களையும், அதன்பின் சாதாரணக் கருங்கல்லையும், இறுதியாகச் சாதாரணப் பாறைகளையும் உபயோகிக்கும் தொழில் நுட்பங்கள் பல இப்பொழுது அறியப்பட்டுள்ளன; மற்றவை இனி அபிவிருத்தி செய்யப்படும்.

இப்பொழுது, எண்ணெய்ச் சுத்திகரிப்புச் சாலைகள் சுத்த மற்ற பெட்ரோலியத்தைச் சுத்தப்படுத்துவதுபோல, பாறையை உலகமெங்குமுள்ள பெரிய தொழிற்சாலைகள் சுத்தப்படுத்தும் காலம் வரும் என்று எதிர்பார்ப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

ஆதலால், 'உலகத்தின் வளங்களை முக்கியமாகக் கட்டுப்படுத்தும் அம்சம் பொருள்களோ, விசைச் சக்தியோ, உணவோ அல்ல; ஆனால் அறிவின் ஆற்றலேயாகும்; எனறும் வற்புறுத்தப்பட்டுள்ளது.

'பூமியிலுள்ள வளங்களுள் இன்று குன்றிருக்கும் ஒன்றே ஒன்று, மக்கள் தொகையேயாகும்; மக்கள் தொகை பெருகுவதனால், கல்வி பெறவேண்டிய இளமை மிக்க ஆண்கள், பெண்களின் தொகையும் பெருகியாக வேண்டும்' என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

திறமையுள்ளவர்கள் சிந்தனை செய்வதற்கு ஊக்கமளிக்கும் வகையில், நாம் போதனா முறைகளை அபிவிருத்தி செய்யவேண்டுமென்றும் யோசனை கூறப்பட்டுள்ளது.

'இந்தியைத் திணிக்க மாட்டோம்' என்பதற்கு எடுத்துக்காட்டா?

'இந்தி பேசாத பகுதிகளில் இந்தியைத் திணிப்பதற்கு முயற்சிக்க மாட்டோம்' என்று குடியரசுத் தலைவரும், பிரதமரும், அமைச்சர்களும் கூறினாலும், நடைமுறை செய்கைகள் பல, எவ்விதத்திலும் இந்தியைத் திணிக்கும் தன்மையானதாகவே இருக்கின்றதென்பதை பன்முறை நாம் எடுத்துக் காட்டியுள்ளோம். இதோ, மற்றுமோர் எடுத்துக்காட்டு!

நாட்டில் உள்ள பன்னிரண்டு முக்கிய மொழிகளில், 'இந்தி அரிச்சுவடி' அட்டைகளைத் தயாரிப்பதற்கு மத்திய கல்வி இலாகா திட்டமிட்டுள்ளதாம்.

இந்தி பேசாத பகுதியிலிருக்கும் இந்தி கற்க விரும்புகிறவர்கள், தங்கள் தாய் மொழி மூலமே தேவநாகிரி எழுத்துக்களைச் சிரமமின்றிக் கற்றுக்கொள்வதற்கு இருமொழி அட்டைகள் உதவுமாம்!

ஒவ்வொரு மொழியிலும் சிறந்ததாகத் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று அட்டைகளுக்கு முறையே ரூ. 500 ரூ 200 ரூ. 100 ஆக, முதல்—இரண்டாவது—மூன்றாவது பரிசுகள் வழங்கப்படுமாம்.

பேச்சு வேறு—செய்கை வேறு என்பதற்கு, இதைவிட வேறு என்ன உதாரணம் வேண்டும்?

செய்திச் சுருள்

தொழிலாளர் சங்க ஆண்டு விழாவும் — மாநாடும்

27—5—56ல், 'தி ஜெனரல் அண்டு இன்டஸ்டிரியல் ஒர்க்கர்ஸ் யூனியனி'ன் 12-வது ஆண்டு விழாவும், மாநாடும் சென்னை-வண்ணையம்பதி பென்ஷனர்லேன் திடலில் தோழர் கே.எஸ். ஷெட்டி தலைமையில் நடைபெற்றது.

தோழர்கள் சி. பி. சிற்றரசு, ஏ. வி. குமார், டி. ஆர் கண்ணபிரான், வி. பி. ராமசாமி ஆகியோர் 'தொழிலாளர்களும், தொழிற் சங்கமும்' என்பதுபற்றி பேசினர். பின்னர், ஷாப் சட்டத்தில் புதிதாகக் கொண்டுவந்திருக்கும் திருத்தத்தை எதிர்த்தும், சைக்கிள் வரியை மீண்டும் திணிக்காமல் ரத்து செய்யக் கோரியும், வடசென்னையில், குறிப்பாக வண்ணையம்பதியில் பொதுக்கூட்டம் நடத்த இடம் இல்லாததால் அரசாங்கமும், நகராண்மைக் கழகமும் தக்க ஏற்பாடு செய்து நல்லதொரு திடலை ஒதுக்குமாறு கேட்டுக்கொண்டும், 'ஸ்டுடியோ' தொழிலாளர்களுக்கு தொழிற்சாலை சட்டத்திலுள்ள உரிமைகளை அமுல் செய்யுமாறு கேட்டுக்கொண்டும், அரசாங்க 'இன்சூரன்ஸ்' திட்டத்தை 'பாக்டரி' சட்டத்தின் கீழ்வரும் எல்லா தொழிற்சாலைகளுக்கும் அமுல் செய்யுமாறு வேண்டுமென்று கோரியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1956—57-ம் ஆண்டிற்குச் சங்க நிர்வாகிகளாக தலைவர்: கே. எஸ். ஷெட்டி; துணைத் தலைவர்கள்: ஏ. வி. குமார், பி. எம் சுவாமிராஜ்; பொதுக் காரியதரிசி: டி. ஆர். கண்ணபிரான்; துணைக் காரியதரிசி: வி. ஜி. ராமசாமி; பொருளாளர்: ஜி. தனபால் — தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செ. மா. முடிதிருத்தத் தொழிலாளர் சங்கம்

29—5—56 காலை 10 மணியளவில், சென்னை மாகாண முடிதிருத்தத் தொழிலாளர் சங்க நிர்வாகக் குழுக்கூட்டம் தோழர் என். சிவானந்தம் அவர்களின் தலைமையில் நடைபெற்றபோது, அரிசனச் சிறுவர்களுக்கு அளிக்கப்பட்டுவரும் கல்விச் சலுகை—உத்தியோகச் சலுகைகளை முடிதிருத்தும் தொழிலாளர்களின் சிறுவர்களுக்கு அளிக்க வேண்டுமென்றும், இந்த ஜூன் மாதத்திலிருந்தே அதை அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமெனவும், முடிதிருத்தக் கடைகளுக்கு நகரசபையால் விதிக்கப்பட்டிருக்கும் 'லைசென்சு'க் கட்டணம் மிக அதிகமாக இருப்பதால், அதை கடை ஒன்றுக்கு ஒரு ரூபாயாக ஆக்க வேண்டும் என்றும், தொழில் வரியை ரத்து செய்ய வேண்டுமென்றும், ஆண்டுதோறும் முடிதிருத்தும் தொழிலாளர்கள் 'டாக்டர் சர்டிபிகேட்' வாங்க வேண்டுமெனவும் ஒவ்வொரு தொழிலாளியும் 'எப்ரன்' அணிந்திருக்க வேண்டுமெனவும் விதித்திருக்கும் நிபந்தனைகளை அமுல் செய்யாமலிருக்குமாறும் சென்னை நகரசபையையும் அரசாங்கத்தையும் கோரிக்கொள்ளப்பட்டதுடன், மற்றும் சில முடிவுகள் செய்யப்பட்டன.

திருச்சி மாநில மாநாடு புகைப் படங்கள்

திருச்சியில் நடைபெற்ற தி. மு. கழக 2-வது மாநில மாநாட்டு நிகழ்ச்சிகளை புகைப்படமெடுத்துள்ள புகைப்பட நிலையங்கள், பத்திரிகையாளர்கள், தோழர்கள் எல்லாம், ஒவ்வொன்றிலும் இரண்டு பிரதிகள் வீதம், தலைமை நிலையத்தில் சேகரித்து வைப்பதற்காக அனுப்பி உதவுமாறு கோரப்படுகிறார்கள்.

தி. மு. க. தலைமை நிலையம்
'அறிவகம்,' சென்னை—[illegible]

நன்றியறிவிப்பு

"தி. மு. கழக 2-வது மாநில மாநாட்டின் ஓவியக் காட்சியில் எனது ஓவியங்களைக் கண்டு சுவைத்து, புகழுரை தந்தவர்களுக்கும், திருத்தம் சொன்னவர்களுக்கும் எனது உளம் கனிந்த நன்றியறிதலைத் தெரிவிப்பதுடன், தங்களின் கருத்துரைப்படி இன்னும் நல்ல முறையில் கருத்தோவியங்களைத் தீட்டி, உங்களுக்கும் — திராவிடத்துக்கும் கலைத்தொண்டு புரிய கடமைப்பட்டிருப்பதுடன், இந்த வாய்ப்பும்—வசதியும் தேடித் தந்த அண்ணா அவர்களுக்கும் எனது இதயத்தை இதன் மூலம் காணிக்கையாக்குகிறேன்,"

என்று, சேலம் 27-வது வட்ட தி. மு. கழக துணைச் செயலாளரும், ஓவியருமான கு. மு. கோபால் தெரிவித்துக் கொள்ளுகிறார்.

திருமணங்கள்

27—5—56 காலை 7-30 மணியளவில், சென்னை—மயிலை கபாலீசுவரர் கோயில் தென்னண்டை மாடவீதியிலுள்ள வன்னியர் சத்திரத்தில், புலவர் எஸ். எஸ். அருணகிரிநாதர் தலைமையில், மயிலை சிவமுத்தின் குமாரசாமி குமாரர் தோழர் சண்முக சுந்தரன் — தோழியர் சரசுவதி திருமணம் நடைபெற்றது. இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பாகத் தரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

நன்றியறிவிப்பு

"27—5—56 அன்று எனது மூத்த மகன் சண்[illegible] தோழியர் சரசு[illegible] திருவுளச் சிறப்பித்து [illegible] வழங்கியும், பரிசுகள் அளித்தும் சிறப்பித்த அனைவருக்கும் எனது வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்." என்று, புலவர் மயிலை சிவமுத்து அவர்கள் அறிவிக்கிறார்.

• • •

27—5—56 காலை 9 மணியளவில், சென்னை—திருவல்லிக்கேணி 42-வது வட்ட தி. மு. கழகத் தோழர் பா. சீனுவாசன்—தோழியர் இந்திராணி திருமணம் தோழர் இளம்பரிதி தலைமையில் நடைபெற்றது. தோழர் சி. பி. சிற்றரசு வாழ்த்துரை வழங்கினார். இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' இதழுக்கு ரூ. 1-ம், 42-வது வட்ட தி. மு கழகத்திற்கு ரூ. 2-ம் மணமகனால் அன்பளிப்பாகத் தரப்பட்டது. 'நம் நாடு' இதழ் அன்பளிப்பு வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

• • •

23—5—56-ல், இராசபாளையத்தில் நடைபெற்ற தோழர் இரா. த. இராமச்சந்திரன் — தோழியர் நாகம்மாள் திருமணத்தின் நினைவாக, 'நம் நாடு' வளர்ச்சிக்கு அன்பளிப்பாகத் தரப்பட்ட ரூ. 1-ம் வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

முகவரி மாற்றம்

மு. புரட்சிமணி,
5, அந்தோனி தெரு,
இராயப்பேட்டை,
சென்னை—14.

அனுதாபம்

29—5—56 இரவு 7 மணியளவில், சென்னை 31-வது வட்ட அழகிரி நினைவு மன்றப் பணிமனையில், மறைந்த மாவீரர் அழகிரி அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் திருமதி எத்திராசு அம்மையார் மறைவையொட்டி ஓர் அனுதாபக் கூட்டம் தோழர் ஆ வில்லவன் கோதை தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் பலர் பேசியபின், அம்மையாரின் குடும்பத்தாருக்கு அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்[illegible]

தோழர்களின் ஆற்றல் பற்றி அண்ணு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ருலும், இந்தப் பாம்புகளைக் கண்டு நான் பயப்படாமலிருந்ததற்கு காரணம் உங்களுடைய மன்றத்தில், 'புலி வந்தாலும் பூனையாகிவிடும்' என்ற நம்பிக்கை இருந்ததால் தான், இந்த நச்சுப் பூச்சிகள் நிறைந்த பெருவெளியை நாங்கள் தேர்ந்தெடுத்தோம்.

"இந்தப் பெருவெளியில் பாடுபடுவதற்குத் திருச்சியில் உள்ள நமது கழகத் தோழர்களான அம்பில் தருமலிங்கம், பொன்மலை பராங்குசம், திருச்சி மணி, நாகசுந்தரம்—இவர்கள் பெயரிட்டுக் கூறப்பட வேண்டியவர்கள்; மற்றும் என்னுடைய கவனத்திற்கு இந்த நேரத்தில் வராதிருக்கின்ற எண்ணற்ற தோழர்கள், இங்கே நாங்கள் வந்தபோது,'இந்த வெட்ட வெளியிலாவது—நாம் கூடுவதாவது?' என்ற சந்தேகத்தை நாங்கள் கொண்ட நேரத்தில், 'இந்தச் சந்தேகத்தைத் துடைக்க முடியும்' என்று எனக்கு வாக்குறுதி அளித்தார்கள். வாக்குறுதி அளித்த தோடுகூட, பட்ட கஷ்டமும், எடுத்துக்கொண்ட முயற்சிகளும் மகத்தானவை.

"உண்மையிலேயே நீங்கள் இப்போது தீர்மானித்தீர்கள்—'நாம் எல்லாம் பொதுத் தேர்தலில் ஈடுபட வேண்டும்'—என்று! அப்படி நாம் எல்லாம் பொது தேர்தலில் ஈடுபட்டு, ஈடுபடுவதற்காக நீங்கள் காட்டுகிற ஆர்வத்தை தேர்தல் காலத்தில் நீங்கள் வளர்ச்சியடையச் செய்து, நாம் வெற்றி பெறுவதற்கான சூழ்நிலை கிடைக்குமானால், இந்த மாநில மாநாட்டை வெற்றிகரமாக நடத்திய நம்முடைய கழகத் தோழர்கள் நாட்டை ஆளவும் தகுதிபடைத்தவர்கள் என்பதை இந்த மாநில மாநாடு நிச்சயமாக எடுத்துக்காட்டும்.

"ஆகையால், அப்படிப்பட்ட சிரமம் எடுத்துக்கொண்டு, மாநில மாநாட்டை வெற்றிகரமாக நடத்துவதற்கு என்னோடு உறுதுணை புரிந்த அனைவருக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன்.

"இந்தப் பெரிய கொட்டகையை அமைக்க எண்ணி பல பந்தல்காரர்களை அழைத்துக் கேட்ட நேரத்தில், அவர்கள் எல்லோரும், நாம் மிரளத் தக்கவகையில் தொகைகளைக் கேட்டார்கள்; ஆனால், அதே நேரத்தில், நம்முடைய கழகத் தோழரும், எனது உற்ற நண்பருமான சாம்பு அவர்களும்,அவருக்குத் துணையாக இருக்கிற வானமாமலை என்ற தோழரும், 'நாமே பந்தல் அமைக்கலாம்' என்றார்கள்.

"இங்கே உள்ள பந்தலுக்கான பொருள்கள் அத்தனையையும் நாமே விலை கொடுத்து வாங்கி, இரவு—பகல் என்று பாராமல் இந்த இடத்திலேயே முகாமிட்டு, நம்முடைய பொதுச்செயலாளரும், நானும், தோழர் சம்பத்தும், மதியழகனும், மற்றும் சென்னையிலே இருந்தும், சுற்றுப்புறமிருந்தும் வந்திருந்த தோழர்களும் உழைத்தோம். நம்முடைய மதுரைத் தோழர் முத்து அவர்கள், இரவு—பகல் என்று பாராமல் உடனிருந்து, இந்த மாநில மாநாட்டுப் பந்தலை இத்தனை சிறப்புடையதாக்கினார்கள்.

"மகத்தான வெற்றியை இந்த மாநில மாநாட்டில் நாம் பெற்றிருக்கின்றோம்; என்றாலும் மாற்றுக் கட்சிக்காரர்கள் மமதையாலேயோ அல்லது, நாட்டு நிலைகளை அறிந்து கொள்வதற்கு நேரமில்லாத காரணத்தாலேயோ தி. மு. கழகத்தைப் பற்றி இன்னும் தப்புக் கணக்குப் போடுகின்றார்கள். அப்படித் தப்புக் கணக்குப் போடும் கட்சியினர், 'தி. மு. க. இன்று தோன்றி, நாளை மறைகிற ஓர் எரி நட்சத்திரம்' என்று கருதினார்கள்; அவர்கள் அத்தனைபேரும்பார்த்துக் கொண்டேயிருந்தார்கள்; சதி வேலையில் ஈடுபட்டுக்கொண்டே நம்மை ஒழித்துக் கட்டுவதற்குக் காத்துக்கொண்டே இருந்தார்கள்; நமக்குள்ளாகப் பிளவு மூட்டலாமா என்று கனவு கண்டு கொண்டிருந்தார்கள்; ஆனால், இன்று, இத்தனைக்கும் பிறகும் இந்த அளவுக்கு வளர்ச்சியடைந்திருக்கின்றோம்.

"பெரியார் இராமசாமியோடு நான், பதினைந்தாண்டுக் காலம் பணியாற்றியிருக்கிறேன்; அவரோடு இருந்த நேரத்தில், ஒவ்வொரு மேடையிலும் அவர் என்னையும், என்னைவிட அதிகமாகக் கட்சிக்குப் பாடுபட்ட தோழர்களையும் பக்கத்தில் அமரவைத்துக் கொண்டே கூறுவார்—'நான் இந்தக் காரியங்களை என்னுடைய நம்பிக்கைக் குரிய வகையில் செய்வதற்கு, வேறு ஆள் யார் இருக்கிறார்கள்?'—என்று! எங்களை வைத்துக்கொண்டே கூறுவார்! அதற்குக் காரணம், எங்களுடைய குறைபாடாக இருக்கலாம்; அவர் எதிர்பார்க்கின்ற அளவுக்கு எங்களிடத்தில் குணங்கள் இல்லாமலிருக்கலாம். அதைக் குறிப்பிட அல்ல, நான் அதை இங்கே கூறுவது! பெரியார் அவர்கள், நாங்கள் எல்லாம் இருந்த காலத்தில், 'எனக்குப் பின்னால் இந்தக் காரியத்தைச்செய்ய யார் இருக்கிறார்கள்?' என்று கேட்டார்; ஆனால், நம்முடைய காலத்தில், எனக்குப் பின்னால் யார் இருக்கிறார்கள்?' என்பதுகூட அல்ல; நான் பார்த்துக்கொண்டிருக்கும்போதே என்னுடைய தம்பிமார்கள் எல்லாக் காரியங்களையும் கவனிப்பார்கள் என்று நான் பெருமையோடு எடுத்துச்சொல்ல முடியும்!

"உண்மையில், நம்முடைய இயக்கத்திற்கு வேறு எந்த இயக்கத்திற்கும் ஏற்பட்டிராத பெரிய ஆற்றல் ஏற்பட்டிருப்பதற்குக் காரணம், யார் யாரிடத்தில் எந்த எந்தத் திறமை மங்கி இருக்கிறதோ—மறைந்துகிடக்கிறதோ, யார் யாரிடத்தில் எந்த எந்த ஆற்றல் கண்டு பிடிக்கப்படாமலிருக்கின்றதோ யார் யார் உள்ளத்தில் சுரங்கத்திற்கு அடியில் தூங்கிக்கொண்டிருக்கும் தங்கத்தைப்போல் பேராற்றல் புதைநது கிடக்கின்றதோ அவைகளைக் கண்டு பிடித்து வெளிக்குக்கொண்டு வருகின்ற அறிவாற்றலை நாம் பெற்றிருப்பதுதான். ஆகையினால்தான், இந்த மன்றத்திலும் மேடையிலும் செயலாற்றும் தீரர்களையும், சிந்தனை அளிக்கும் வீரர்களையும், எதற்கும் அஞ்சாத ஆற்றல் படைத்தவர்களையும் ஏராளமாக நாம் பார்க்க முடிகிறது.

"ஏழெட்டு ஆண்டு காலத்தில், இத்தனை பெரிய வளர்ச்சியை அடைய முடிந்திருக்கிறது; ஆனால், இதற்கு நாம் கொடுத்த விலை கொஞ்சம் அல்ல! சிந்திய கண்ணீர் கொஞ்சமல்ல! கொட்டப்பட்ட இரத்தமும் சாமானியமானதல்ல! கொடுக்கப்பட்ட பலியும் சாதாரணமானதல்ல! எத்தனையோ தடியடிகளைத் தாங்கிக் கொண்டோம்! எத்தனையோ தியாகத் தழும்புகளை ஏற்றுக் கொண்டோம்!

"தடியடியைத் தாங்கலாம்—உடல் வலிவு இருக்கிறவர்கள்; ஆனால், ஏச்சுப் பேச்சுக்களைக் கேட்பதென்பது, உடல் வலி இருந்தால் மட்டும் போதாது—உள்ளத்திண்மை இருந்தால் மட்டும்தான் முடியும்!

"நம்மை ஏசியவர்கள் தொகை ஏராளம்! அவர்கள் பயன்படுத்திய தமிழ்ச் சொற்கள், தமிழ் அகராதியில் இருக்க இலாயக்கற்றவை! அப்படிப்பட்ட ஏச்சுப்பேச்சுக்களை எல்லாம் தாங்கிக்கொண்டு நாம் முன்னேறி வந்திருக்கிறோம் என்றால், நம்முடைய குறிக்கோளில் நமக்கு இருக்கிற நம்பிக்கையும், அந்தக் குறிக்கோளை நாம் வெற்றிகரமாக முடித்துக் காட்டுவோம் என்பதில் நமக்குள்ள நம்பிக்கையும், நாட்டு மக்கள் நமக்குப் பேராதரவு அளிப்பார்கள் என்ற பெருநம்பிக்கையும் தான் நம்மை எல்லாம் ஊக்குவிக்கின்றன.

"நம்மிலே எவரும், பெரிய பிரமாதமான மேதைகள் அல்ல. 'புறநானூறு உனக்குத் தெரியுமா?' என்று கேட்டால், 'தெரியாது' என்று நான் சொல்லுவேன்; 'அகநானூற்றை நன்றாகப் படித்திருக்கிறீர்களா?' என்று ஒரு தமிழ்ப் புலவர் கேட்டால், 'இல்லை' என்றுதான் சொல்ல முடியும்; 'திருக்குறள் அத்தனையும் உங்களுக்குத் தெரியுமா?' என்று கேட்டால், 'இல்லை' என்றுதான் சொல்லவேண்டி வரும். அதுவுமன்றி, 'உலக வரலாறு அத்தனையும் நாம் அறிந்திருக்கிறோமா?' என்றால், 'அத்தனையும தெரியாது' என்றுதான் சொல்லமுடியும் — அறிவுத் துறையைப் பொறுத்த வரையில்!

"பணபலத்தைப் பொறுத்த வரையில், பிறர் பார்த்து, 'இவர்களிடத்தில் ஏராளமாகப் பணமிருக்கிறது' என்பதைப் பெறுவதற்காக வேண்டுமானால் நாங்கள் பயன்படலாமே தவிர, ஒரு பெரிய இயக்கத்தை நடத்திச்செல்வதற்குத் தேவையான பணம் படைத்தவர் எவரும் நம்மிடத்தில் இல்லை.

"பத்திரிகை பலம் நமக்கு உண்டா? இன்று காலை, 'சுதேசமித்திரன்' பத்திரிகையைப் பார்த்தேன். நமமுடைய மாபெரும் ஊர்வலத்தைப்பற்றி, இங்கு ஒரு தோழர் கூறினர்...'இதை நான் ஊர்வலம் என்று எபபடிச் சொல்லுவேன்? மக்கள் வெள்ளம் அல்லவா கரைபுரண்டு வந்தது?'—என்று! ஆனால், 'சு. மி.' ஆசிரியர் அதனை தமது பத்திரிகையில ஆறாவதோ, ஏழாவதோ பக்கத்தில் ஐந்தாவது கலத்திலேயோ, ஆறாவது கலத்திலேயே ஒரு கால் கலம் அளவுக்குத்தான் செய்தியாக வெளியிட்டார்கள்; இங்கே அரைடஜன் பத்திரிகை நிருபர்கள் உட்கார்ந்துகொண்டு ஓயாமல் எழுதுகிறார்கள்—இவர்கள் மீது குறை அல்ல; இவர்கள்மீது எனக்குள்ள பரிதாபதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்; நிருபர்கள் எத்தனை அருமையான காட்சிகளைக் காண்கிறார்கள்? அவர்கள் எவ்வளவு சிரமப்பட்டு எழுதுகிறார்கள்? அவர்கள் அப்படி எழுதிய ஒவ்வொரு எழுத்தையும் அவர்களுடைய முதலாளிமார்களால் எவ்வளவு அலட்சியப்படுத்தப்படுகின்றது? வருந்துகிறோம், அதற்காக! அனுதாபப்படுகிறோம்!

"ஆனால், நாம், பத்திரிகை பலத்தை நம்பியல்ல, இந்த இயக்கத்தைத் துவக்கியது; பத்திரிகை பலத்தைநம்பி, இந்த இயக்கத்தைத் துவக்குவது என்றால், சென்னை மவுண்ட்ரோடில் உள்ள 'இந்து' பத்திரிகையின் காரியாலயத்தை ஒருமுறை பார்த்துவிட்டு வந்தால், யாராலும் இயக்கம் நடத்தமுடியாது.

"எத்தனை பெரிய கட்டிடம் அது! கவர்னர் மாளிகைக்கு இருக்கிற கவர்ச்சியைவிட அதற்கு அதிகம்! சென்னைக்கு வெளிநாட்டிலிருந்து எவரேனும் தூதவர் வந்தால், முதலில் அவர் போய்வரும் இடம் இராஜபவனமாயும், அடுத்த இடம் 'இந்து' பத்திரிகைக் காரியாலயமாகவும் இருக்கும்; அத்தனை பெரிய கட்டிடம அது!

"நான் அந்தக் கட்டிடத்தைப் பார்க்கிற நேரத்தில், சில வேளைகளில் பெருமூச்செறிவேன்; உடன் புன்னகையும் பிறக்கும்! பெருமூச்செறிவதற்குக் காரணம், 'இவ்வளவு பலம் பொருந்திய கோட்டையை அல்லவா, எதிர்க்க வேண்டியிருக்கிறது?'—என்று! மறுபடியும புன்னகை வருவதற்குக் காரணம், 'நம்மாலே முடியத்தானே செய்கிறது'—என்ற எண்ணம் தோன்றுவதால்! எனவே, பத்திரிகை பலத்தை நம்பியல்ல, நமது இயக்கம் நடந்துகொண்டிருப்பது; எனவே, பத்திரிகைகள் எவ்வளவு இருட்டடிப்புச் செய்தாலும் நமக்குக் கவலை இல்லை; நீங்கள் எல்லாம் 'நடமாடும் பத்திரிகைகள்'; 'நடமாடும் பத்திரிகைகள்' என்று நான் கூறுவது தவறு, தவறு; நீங்கள் எல்லாம் 'நிரந்தரக் காவியங்கள்'; நாட்டு மக்களில், இந்த மாநாட்டிற்கு வர இயலாது போய்விட்டவர்கள் பல சிற்றூர்களில் சிக்கித் தவிக்கிறார்கள்; அவர்களை எல்லாம் காணுங்கள்; நீங்கள் இங்கே கண்ட அழகான காட்சிகள், கேட்ட வளமான கருத்துக்கள், அருமையான உரைகள், ஆற்றப்பட்ட எழுச்சிமிகு சொற்பொழிவுகள், திட்டப்பட்ட நல்ல திட்டங்கள், பிரச்சினைகளுக்காக, எடுத்துக் காட்டப்பட்ட நல்ல காரணங்கள் — இவற்றை எல்லாம், மாநாட்டிற்கு வராத மக்களுக்கு வந்திருக்கிற நீங்கள் எடுத்துச் சொல்லவேண்டும். இவற்றை அப்படி எடுத்துக் கூறும் 'சிறு தூதவர்'களாகிச் செல்வதற்குத்தான் இங்கே நீங்கள் வந்திருக்கிறீர்கள். திருவிழாவிற்குப் போய்விட்டு வந்தால், இதைச் செய்ய முடியாது!

"மாநில மாநாட்டிற்கு வந்துள்ள நீங்கள், திருவிழாச் செய்திகளைக் கொண்டு செல்பவர்கள் அல்லர் இங்கே, திரு இடத்தை மீட்பதற்கு எப்படிப்பட்ட அணிவகுப்புத் தயாராக இருக்கிறது என்பதைக் கண் கூடாகப் பார்த்திருக்கிறீர்கள்; உரைகளை எல்லாம் காதாரக் கேட்டிருக்கிறீர்கள்; நெஞ்சில் அவற்றைப் பதியவைத்துக் கொண்டிருப்பீர்கள்; உளமாறச் சிந்தித்துப் பார்த்து முடிவுகளை மேற்கொண்டிருக்கிறீர்கள்.

"இவற்றை எல்லாம் நாடெங்கும், நகரம்—பேரூர்—சிற்றூர், பட்டி தொட்டிகளில் எல்லாம், காண்கிற நல்லாரிடத்தில் எல்லாம் நீங்கள் எடுத்துச் சொல்லவேண்டும். எல்லா இடத்திற்கும் நம்முடைய கருத்துக்கள் பரவ வேண்டிய நிர்ப்பந்தமான சூழ்நிலை இப்போது நமக்கு ஏற்பட்டிருக்கிறது — கடைசியில் நீங்கள் நிறைவேற்றியிருக்கிற—'தி. மு. கழகம் தேர்தலில் ஈடுபட வேண்டும்'—என்ற தீர்மானத்தினல்! அது குறித்து, நான் சிறிது கூறவிரும்புகிறேன்."

[பேச்சு முடியவில்லை; தொடர்ந்து வெளிவரும்.]

★★★★★★★★★★★★★★★★★★

'நம் நாடு'

நான்காம் ஆண்டு
துவக்க விழா மலர்

★

விற்பனையாளர்கள் தங்கள் தேவையை 10—6—56-க்குள் தெரிவித்துவிடக் கோருகிறோம்.

★★★★★★★★★★★★★★★★★★

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

'நம் நாடு'

நான்காம் ஆண்டு
துவக்கவிழா மலர்

(12 பக்கங்கள்)

★

15—6—56-ந் தேதியன்று
நாடெங்கும் கிடைக்கும்

விலை அணு 2.

★

அண்ணு, மற்றும், கழக எழுத்தாளர்
பலரும் எழுதுகின்றனர்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

துறைமுக ஐக்கியத் தொழிலாளர் சங்கம்

6—6—56 மாலை 5-30 மணியளவில் துறைமுக 'எம்' பிரிவு போலீஸ் நிலையத்திற்கு அருகிலுள்ள திடலில், 'சென்னை துறைமுக ஐக்கியத் தொழிலாளர் சங்க'ச் சார்பில், தோழர் பி. பலராமன் தலைமையில், ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் சி. பி. சிற்றரசு, டி. ஆர். கணேசன், ஐ. மாயாண்டிபாரதி ஆகியோர் பேசுவர்.

கே. கே. நீலமேகம்

சென்னை, ஜுன் 5—

தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள், அண்ணு அவர்களைச் சந்தித்துப் பேசுவதற்காக இன்று சென்னை வந்தார்; மாலை, காஞ்சி சென்று, அண்ணு அவர்களைச் சந்தித்துவிட்டு, ஜுன 7-ந் தேதியளவில் குடந்தை சேருவார்.

பம்பாயில் மீண்டும் தடியடிப் பிரயோகம்!

வடக்கு பம்பாயில், மக்கள் கூட்டத்தின்மீது, போலீசார் தடியடிப் பிரயோகம் செய்துள்ளனர் என்று தெரிகிறது.

தடையை மீறி ஊர்வலம் நடத்தியதாகக் கைது செய்யப்பட்ட சம்யுக்த மகாராட்டிர ஆர்ப்பாட்டக்காரர்கள் 50 பேரை போலீஸ் வண்டியில் கொண்டு செல்லப்படும் நேரத்தில், ஆர்ப்பாட்டக்காரர்களின் பின்னல் வந்த சுமார் ஆயிரம் பேர், போலீசார் மீது கல் வீச ஆரம்பித்தனராம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம். சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.